753

753/3-5

உ

சிவமயம்.

திருப்பயற்றூர் என்னும்

# திருப்பயத்தங்குடித் தல வரலாறு.



OFFICE OF THE REGISTRAR OF ...
4 - SEP 1957
MADRAS

தேவஸ்தான வெளியீடு.

Q23:38·2193·71957.

N57

112945

உ
சிவமயம்.

திருப் பயற்றூர்

என்னும்

# திருப்பயத்தங்குடித்

# தல வரலாறு.

★

புலவர் மணி

வித்வான், திரு மு. இரத்தின தேசிகர் அவர்களால்

எழுதப்பெற்றது.

★

1—6—1957.

Q 23338. 2111 93.T N57
TAMIL NADU ARCHIVES
112945

உ

# முன்னுரை.

தென்னாட்டில் விளங்கும் சிவத் தலங்களின் வரலாறுகள் சில ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய வரலாற்று நூல்கள் அவ்வத் தலங்களை அடைந்து வழிபடும் மெய்யன்பர்களுக்குப் பெருந்துணை செய்கின்றன. அன்றியும், வழக்காற்றில் நின்றும் மறைந்துபோன அரிய சில நாட்டு வரலாறுகளும் இக்காலத்தே அறியப்பெறுகின்றன. இக்கால நிலைக்கு இத்தகைய வரலாற்று நூல்கள் பொது மக்களுக்கு நன்மை புரிவதைக் கண்டு திருப்பயற்றூர் என்னும் இத்தலத்திற்கும் வரலாறு ஒன்று எழுதவேண்டு மென்ற எண்ணம் எங்களுக்கு நீண்ட நாளாக இருந்து வந்தது. இன்று இச் சிறுநூல் வெளி வருகின்றது.

இத்தலத்தே எழுதப்பெற்றுள்ள கல்வெட்டுகளை ஆராய்ந்து அருங் கருத்துக்களை அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பகுதியைச் சார்ந்த திரு. **சுந்தரேச வாண்டையா**ரவர்கள் தந்து உதவினார்கள். அவற்றின் துணை கொண்டும், செவி வழிச் செய்திகளைக் கொண்டும் இவ் வரலாற்று நூலினைத் திருவாரூர், புலவர்மணி, வித்வான், திரு **மு. இரத்தின தேசிக**ரவர்கள் எழுதித் தந்தார்கள். இவ்விரு பெரியோர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

இச்சிறு நூலினைப் பயின்று திருப்பயற்றூர்த் தலப் பெருமையை உணர்ந்து வழிபட்டு நற்பேறுகள் எய்தும் வண்ணம் சிவநேயச் செல்வர்களை வேண்டிக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

**T. S. வேதநாயகம் பிள்ளை,**
நிர்வாக தர்மகர்த்தா.

திருப்பயத்தங்குடி,
1—6—57.

**A. S. கங்காதரம் பிள்ளை,**
**K. நாகரத்னம் பிள்ளை,**
தர்மகர்த்தர்கள்.

உ

சிவமயம்.

## தலம்.

கடல் சூழ்ந்த காசினியில் நிலவிவரும் சமயங்கள் பல. அவற்றுள் தொன்மையாலும் உண்மைச் சமயக் கொள்கைகளை உணர்த்தும் பான்மையாலும் தலை சிறந்து விளங்குவது சைவ சமயமேயாகும். இது பற்றியே,

"சைவத்தின்மேற் சமயம்வேறிலை அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின்மேற் றெய்வம் இல்லை.

என்பது போன்ற திருவாக்குகளும் எழலாயின. சிவனை முழுமுதற் பரம்பொருளாய்க்கொண்டு இருப்பதால் இச்சமயம் சைவம் எனப் பெயர்பெறுவதாயிற்று. சிவபெருமான் உயிர்த்தொகுதிகள் உய்யும் வண்ணம் அருஉருவத் திருமேனியாகிய 'இலிங்க வடிவத்துடன் எழுந்தருளி உள்ள புண்ணிய பூமி, தலம் எனச் சிறப்பிக்கப்பெறுகிறது. ஒரு தலத்திற்குச் சிறப்பு அங்கு எழுந்தருளியுள்ள மூர்த்தியாலும், தீர்த்தத்தினாலும் உண்டாவதாகும். மெய்நெறியில் விழைவுகொண்டு உண்மைப்பொருளை உணர முற்படுவோருக்கு; இந்த மூர்த்தி தல தீர்த்தங்களே உறுதுணை புரிகின்றன.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

என்பது தாயுமானவர் வாக்கு.

இப்படிச் சிறப்புற்று விளங்கும் தலங்களுள் தேவாரம் பாடிய மூவராலும் பாடப்பெற்று விளங்குவன 274. அவற்றுள் சோழநாட்டில் அமைவன 190. காவிரியின் வடகரையில் உள்ளன 63. காவிரியின்

தென்கரையில் திகழ்வன 127. திருப்பயற்றூர் என்னும் இத்தலம் காவிரியின் தென்பால் உள்ள 127 தலங்களுள் ஒன்ருய்த் திகழ்கின்றது. தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் தாலூகாவில் திகழ்கின்றது. மாயூரம் — காரைக்குடிப் புகைவண்டிப் பாதையில் திருவாரூரை அடுத்து வடக்கே 5-மைல் தொலைவில் உள்ள விற்குடிப் புகைவண்டி நிலயத்திலிருந்து கிழக்கே 4½-மைல் தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. விற்குடிப் புகைவண்டி நிலயத்திலிருந்து, கிழக்கு நோக்கி நாகூர் செல்லும் கற்சாலையில் சுமார் 1-மைல் செல்லின் கல்யாணிஇருப்பு என்ற இடத்தை அடையலாம். அங்கிருந்து வடக்கே செல்லும் கற்சாலையில் 1-மைல் சென்ருல் விற்குடியை அடையலாம். அங்கிருந்து கிழக்கு நோக்கி விளப்பாற்றின் தென்கரை வழியே 2½-மைல் சென்று, ஆற்றின் வடகரையை அடையின் திருப்பயற்றூரை அடையலாம்.

## இயற்கை அமைப்பு.

இத்தலம் வயலும் வயல்சூழ்ந்த இடமுமாகிய மருத நிலத்தில் அமைந்துள்ளது. ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் அன்ருே? இவ்வூரின் தென்னெல்லையாக ஓடும் விளப்பாறு இவ்வூரிற்கு அழகு செய்கின்றது. தென்னை, மா, பலா, வாழைகள் மலிந்த சோலைகள் நாற்புறமும் சூழ்ந்துள்ளன. சுரும்போடு வண்டினங்கள் இசைமுரல எழும் இனிய ஓசையையும் மாந்தளிரைக் கோதும் கோகிலங்களின் குளிர்ந்த கானத்தினையும், தேமதுரக் கிளவிகளைப் பிற பறவைகள் மிழற்றுவதையும் இத்தலத்தை அடைவார் கேட்டின்புறுதல் கூடும்.

## பிற குறிப்புகள்.

ஊரைச் சூழவிருக்கும் சேரிகளைச் சேர்த்து இவ்வூரில் சுமார் எழுபத்தைந்து வீடுகளே உள்ளன. மக்கள் எண்ணிக்கை முந்நூறிற்கு மேற்படாது.

தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்தாரால் நடத்தப் பெறும் தொடக்கப்பள்ளி ஒன்று இவ்வூரிலிருக்கிறது, ஆசிரியர் ஒருவரே. 5 வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 50. கோயிலைச் சூழ நான்கு வீதிகள் அமைந்துள்ளன. ஊரின் மேற்கு எல்லையில் குளக்கரையில் அரசமரத்தடி விநாயகர் அமர்ந்திருக்கிறார். கிழக்கே இரதக்கொட்டகை இருக்கிறது. ஊரின் கிழக்கெல்லையாகக் கீழைத் தஞ்சையும்; மேற்கு எல்லையாக வீரபோகமும், தெற்கு எல்லையாக நித்தியப்பேட்டையும், வடக்கு எல்லையாகப் பில்லாலியும் திகழ்கின்றன.

இத்தலத்தைச் சூழ, சுமார் 4-மைல் எல்லைக் குட்பட்டு அமைந்துள்ள தலங்கள்;

1. **திருமருகல்:** கிழக்கே சுமார் 4-மைல் தொலைவில் உள்ளது. திருஞானசம்பந்த சுவாமிகளாலும் திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடப்பெற்றது.

சுவாமி – மாணிக்க வண்ணர்; அம்பிகை – வண்டுலாங்குழல் அம்மை. விடந்தீண்டியிறந்த செட்டிப் பிள்ளையைத் திருஞானசம்பந்த சுவாமிகள் பதிகம்பாடி உயிர்பெறச் செய்த தலம்.

2. **திருச்செங்காட்டங்குடி:** கிழக்கே சுமார் $2\frac{1}{2}$ மைல் தொலைவில் உள்ளது. திருஞானசம்பந்த சுவாமிகளாலும், திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடப் பெற்றது.

சுவாமி - கணபதீச்சுரர்; அம்மை - திருக்குழல் நாயகி பிள்ளைக் கறி படைத்த சிறுத்தொண்டர் வாழ்ந்த தலம்.

3. **கீழைத் தஞ்சாவூர்:** கிழக்கே 1-மைல் தொலைவில் உள்ளது. திருவாரூர்ப் பூங்கோயில் பூமேடையின் அருகே கிடந்த மலர் ஒன்றினை முகர்ந்த குற்றத்திற்

காகக் காடவர்கோன் கழற்சிங்கன் என்ற அரசனின் மனைவி மூக்கை அரிந்த செருத்துணை நாயனார் வாழ்ந்த தலம்.

4. **திருமாலயன் பொய்கை**: கிழக்கே 1-மைல் தொலைவிற்குள் உள்ளது. திருமாலும் பிரமனும் வழிபட்ட தலம்.

5. **வைப்பூர்**: தெற்கே 1-மைல் தொலைவில் உள்ளது. இவ்வூரிலிருந்துதான் செட்டிப் பெண் தன் காதலனுடன் தாய் தந்தையர் அறியாது திருமருகல் சென்றாள். அரவு தீண்டி இறந்த காதலனை ஞானசம் பந்தர் அருளால் மீண்டும் பெற்றாள் என்பது வரலாறு.

6. **விற்குடி**: மேற்கே 2½-மைல் தொலைவில் உள்ளது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்றது.

சுவாமி – வீரட்டானேஸ்வரர்; அம்பிகை – ஏலவார்குழலி. அட்டவீரத் தலங்களில் ஒன்று. சலந்தரனைச் சங்கரித்த தலம்.

7. **திருப்பனையூர்**: வடமேற்கில் 4-மைல் தொலைவில் உள்ளது. திருஞானசம்பந்த சுவாமிகளாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் பாடப்பெற்றது.

சுவாமி–சவுந்தரியநாதர்; அம்பிகை–பெரியநாயகி.

8. **திருக்கண்ணபுரம்**: வடக்கே 2-மைல் தொலைவில் உள்ளது. வைணவத்தலம், மங்களா சாசனம் பெற்றது.

9. **இராமனதீச்சரம்**; வடக்கே 2-மைல் தொலைவில் உள்ளது. (திருக்கண்ணபுரத்தில் உள்ளது) திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்றது.

சுவாமி – இராமநாதேசுவரர்; அம்பிகை – கருவார் குழலியம்மை. இராமர் பூசித்த தலம்.

*10.* **திருப்புகலூர்:** வடக்கே 3-மைல் தொலைவில் உள்ளது. மூவராலும் பாடப்பெற்றது.

சுவாமி – அக்நீசுவரர்; அம்பிகை–கருந்தாழ் குழலியம்மை. திருநாவுக்கரசு சுவாமிகள் முத்தி பெற்ற தலம். முருக நாயனர் நந்தவனத் தொண்டு புரிந்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் செங்கலைப் பொன்னாகப்பெற்ற தலம்.

## கோவிலின் தோற்றம்.

கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியோடு விளங்குகிறது. கோயில்முன்னே இருமருங்கிலும் நான்கு ஐந்து வீடுகள் உள்ளன. கோயிலின் சந்நிதியில் உள்ள வீடுகளை அடுத்து இத்தலத்தில் பிரம்ம தீர்த்தமாகிய கருணைதீர்த்தத்தின் தென்கரை அமைந்துள்ளது. இராஜகோபுரம் இல்லை. கிழக்கு வாயிலில் இருமருங்கினும் சுவர்களின் மீது இரு நந்தி வடிவங்கள் அமைந்துள்ளன கோயிலுக்குத் தென்புற வாயிலும் ஒன்று உண்டு. இவ்வாயில் கூத்தப்பிரானது திருமுன்பு அமைந்துள்ளது. சுற்று மதிலை அடுத்துக் கோயிலின் தென்புறமும், மேல்புறமும் நந்தவனம் அமைந்துளது. கோயிலின் கிழக்கு–மேற்கு நீளம் 175 அடி, தெற்கு–வடக்கு அகலம் 105 அடி.

## கோயிலின் உள்ளமைப்பு.

கோயிலின் கீழ்புற வாயிலிலிருந்து உள்ளே சென்றால் பலிபீடமும், நந்தியும் அமைந்திருப்பதைக் காணலாம். நாற்புறச் சுவர்களை அடுத்து ஒரே உட்சுற்று இருக்கிறது. உட்சுற்றின் தென்கீழ் மூலையில் மடைப்பள்ளி மேற்கு நோக்கிய வாயிலுடன் அமைந்துள்ளது. மடைப்பள்ளியின் எதிரே கிணறு ஒன்று இருக்கிறது.

மேல்புறச் சுற்றுச் சுவரிற்கும் விநாயகர் முதலிய பரிவாரங்களின் கோயில்களுக்கும் இடையே மேற்குச் சுற்று அமைந்துள்ளது. தக்ஷிணாமூர்த்திக்கு முன்பாக; சிலந்திமரம் தலவிருக்ஷமாக அமைந்துள்ளது. வடக்குச் சுற்றில் சண்டிகேஸ்வரருக்குக் கிழக்குப்புறம் கிணறு ஒன்று இருக்கிறது. வடக்கு மூலையில் தனி தண்டபாணி சந்நிதியும் வாகன மண்டபமும் அமைந்துள்ளன. முன் மண்டபத்தில் தெற்கு நோக்கிய அம்பிகை சந்நிதியும், அம்பிகை சந்நிதியின் இடதுபுறம் அலுவலகமும் அமைந்துள்ளன. அடுத்து மகாமண்டபமும், அர்த்த மண்டபமும் சுவாமி சந்நிதியும் அமைந்துள்ளன.

## மூர்த்தி.

இத் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானுக்குத் **திருப்பயற்றுநாதர்** என்ற பெயர் வழங்குகின்றது. வணிகன் ஒருவன் சுங்கம் கொடுக்க அஞ்சி, தன் மிளகுப் பொதிகள் எல்லாம் சுங்கம் கொடுக்க வேண்டாத பயறு மூட்டைகளாக மாறவேண்டும் என்று இவ்வூர் இறைவனை வேண்டியபொழுது திருவருளால் மிளகுப் பொதிகள் எல்லாம் பயறு மூட்டைகளாக மாறிய காரணம்பற்றிப் பயற்றுநாதர் என்ற பெயர் வந்தது என்பது செவிவழிச் செய்தி. பைரவ முனிவர் இத்தலத்தே பெருமானைப் பூசித்து அருள் பெற்றார் என்பது வரலாறு. சுவாமிக்கு வடமொழியில் வழங்கிவரும் பெயர் **முக்தபுரீஸ்வரர்** என்பது. திருமேனி மிகப் பழமை வாய்ந்தது. ஆவுடையார் நாற்கோண வடிவில் அமைந்துள்ளது.

## அம்பிகை.

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற அம்பிகையின் பெயர் **காவியங்கண்ணி** அம்பாள் என்பது. காவி என்பது நீர்ப்பூவில் ஒருவகை. கழுநீர்மலர் என்றும் அம்மலர் பெயர் பெறும். குவளை எனக் கூறுவதும் உண்டு. செந்நிறம் வாய்ந்த மலரைச் செங்குவளை

என வழங்குவது மரபு. செங்கழுநீர் என்றும் அழைக்கப் பெறும், திருவாரூர் தியாகேசருக்கு உகந்த, மலர் இதுவே. நீலநிறம் உடைய மலரைக் கருங்குவளை என வழங்குவர். வடமொழியில் உற்பலம் என்று அழைக்கப்பெறும். இம்மலர் மகளிர் கண்ணிற்கு உவமையாக நூல்களில் எடுத்தாளப் பெறுகின்றது. இத்தலத்தே எழுந்தருளியிருக்கின்ற அம்பிகையின் திருக் கண்களும் இக் காவி மலர்களை ஒத்திருக்கும் காரணம் பற்றிக் காவியங்கண்ணி என்ற பெயரை மக்கள் அம்பிகைக்கு வழங்கி வழிபட்டு வருகின்றனர். இத்தலத்தின் பிரம தீர்த்தத்தில் முழுகி அம்பிகையை வழிபடுவதால் கண்ணோய் நீங்கும் என்ற செய்தி சாசனத்தால் அறியப்படுகின்றது. அம்பிகை நான்கு கரங்களுடன் காட்சியளிக்கின்றாள். இடது கை ஒன்று துடையில் உள்ளது. மற்றதில் தாமரை மலர் இருக்கிறது. வலது கை ஒன்று அபய முத்திரை அளிக்கிறது. மற்றதில் அக்கமணிமாலை அமைந்துள்ளது. அம்பிகையின் வடிகாதில் குழைகள் விளங்குகின்றன. வடமொழிப் பெயர் அம்பிகைக்கு நேத்ராம்பிகை என்பது.

"காவியங் கண்ண ளாகிக் கடல் வண்ண மாகிநின்ற
தேவியைப் பாகம் வைத்தார் திருப்பற் றூரனாரே."

என்பது அப்பர் சுவாமிகளின் திருவாக்கு.

## விநாயகர்.

ஆலயத்தின் உட்புறமாக உள்ள தெற்குச் சுற்றில் கிழக்கு நோக்கிய விநாயகர் சந்நிதியிருக்கின்றது. இவ் விநாயகர் **சித்திவிநாயகர்** என்று அழைக்கப்பெறுகின்றார். முன் மண்டபத்தின் இடதுபுறமாக மகா கணபதி எழுந்தருளியிருக்கின்றார். விநாயகரைப் பற்றிய வேறு தனிச்சிறப்புகள் இத் தலத்திலில்லை.

## தீர்த்தம்.

இத்தலத்தின் தீர்த்தத்திற்குக் கருணை தீர்த்தம் எனப் பெயர் வழங்குகின்றது. இத் தீர்த்தம் ஆலயத்

தின்முன் இடது கைப்புறமாக அமைந்துள்ளது. தீர்த்தத்தில் முழுகி மூர்த்தியை தரிசிக்க வேண்டு மென்பது சைவசமயக் கொள்கை. தீர்த்தம் இறைவன், இறைவியரது கருணைவடிவாய்த் திகழ்வது. தீர்த்தத்தில் முழுகினோர்; இறைவன், இறைவியரது கருணையில் திளைத்திருக்கிறார்கள் என்பதுதான் மரபு. இக்கருத்துப்பற்றியே

பைங்குவளைக் கார் மலரால்
செங்கமலப் பைம்போதால்
அங்கங் குரு கினத்தால்
பின்னும் அர வத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந் தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப்பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்"

என்ற திருவெம்பாவைப் பாடலும் மாணிக்கவாசக சுவாமிகளால் திருவாய்மலர்ந் தருளப் பெற்றுளது. இம்முறை பற்றி இத்தலத்தில் கோயில்கொண்டுள்ள திருப்பயற்றுநாதர் காவியங்கண்ணி என்ற இருவரது கருணைவடிவாய்த் திகழும் தீர்த்தம் கருணாதீர்த்தம் என்றழைக்கப்பெறுவது முறையே. இத்தீர்த்தத்தில் மூழ்கி இறைவியை வழிபடுவதால் கண்ணோய் நீங்கும்.

## தல விருக்ஷம்.

தென்னாட்டிலுள்ள ஒவ்வொரு சிவ தலத்திலும் ஒவ்வொரு தல விருக்ஷம் உண்டு. தில்லை, இடைமருது, என்ற தலங்களில், தில்லை, மருது என்ற விருக்ஷங்கள் தல விருக்ஷங்களாக அமைந்திருத்தல் பற்றியே அத்தலங்களுக்கு அப் பெயர்கள் வழங்குவவையாயின. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த நம் முன்னோர் மர நிழலில் இறைவனுக்குத் திருவுருவமைத்து வழிபட்டு வந்த அடையாளமே இன்று

தல விருக்ஷ மென்ற பெயரால் வழங்கப்படுகின்றது. அவ்வண்ணமே இத் தலத்திற்கும் "**சிலந்தி**" மரம் தல விருக்ஷமாக அமைந்திருக்கின்றது. ஆலயத்தின் தென் சுற்றில் தென்முகக் கடவுளின் திரு முன்னர் இச் சிலந்தி மரம் அமைந்துள்ளது. மலர் மஞ்சள் நிறத்துடன் சிலந்திப்பூச்சி வடிவில் அமைந்துள்ளது. சித்திரை, வைகாசி மாதங்களில் பூக்கும். மலரில் மணம் உண்டு. இலை, புன்னை யிலை போலிருக்கின்றது.

**மண்டபம்.**

இவ் வாலயத்தில் குறிப்பிடத்தக்க தனி மண்டபம் ஒன்றுமில்லை. சிவாகம விதிப்படி ஒவ்வோராலயத்திற்கும் அமைய வேண்டிய அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்ற இவற்றைத் தவிர அம்பிகையின் சந்நிதியில் ஒரு பெரிய மண்டபம் அமைந்துள்ளது. தனித் தண்டபாணி சந்நிதியில் வாகனங்கள் உள்ள மண்டபம் ஒன்றும் அமைந்துள்ளது.

**சுற்றுக் கோயில் உட் கோயில் முதலியன.**

இவ் வாலயம் சிறிய அளவில் அமைக்கப் பெற்றிருத்தலின் ஒவ்வொரு சிவாலயத்திற்கும் அமைய வேண்டிய பரிவார தெய்வங்களின் உறைவிடங்கள் அன்றித் தனித்த வகையில் குறிப்பிடத்தக்க சுற்று ஆலயங்களில்லை. தென் சுற்றிலுள்ள தென்முகக் கடவுளின் இரு மருங்கிலும் வலதுபுறமாக இரு முனிவர் வடிவங்களும், அவற்றிற்குமேல் இரு பெண் வடிவங்களும், இடதுபுறமாக ஒரு முனிவர் வடிவமும், அதற்குமேல் இரு பெண் வடிவங்களும் அமைந்துள்ளன. இவற்றிற்கு ஆன வரலாறின்று உணரப் படவில்லை. மேற்குச் சுற்றில் கிழக்கு நோக்கி சித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. அதற்கிடதுபுறம் சாமான் அறை ஒன்றிருக்கின்றது. சாமான் அறைக்கு இடதுபுறமாக, மேலைக் குமரர், வள்ளி,

தெய்வயானை அம்மையாருடன் காட்சி அளிக்கின்றார். குமரனுக்கு எதிரில் வேலும் மயிலும் அமைந்துள்ளன. மேலைக் குமரனுக்கு இடதுபுறமாக, வள்ளி தெய்வ யானை அம்மையாருடன் கூடிய மற்றொரு சுப்பிரமணி யரும் காட்சி அளிக்கின்றார். அடுத்து வடக்கே ஸ்ரீ விசாலாட்சியுடன் ஸ்ரீ விசுவநாதர் வீற்றிருந்தருளு கின்றார். அடுத்து வடக்கே மகாலக்ஷுமி, கஜலக்ஷுமி யாகக் காட்சியளிப்பதைக் காணலாம். வடக்குச் சுற்றில் சண்டிகேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. சண்டிகேஸ்வரருக்கு எதிரே மூலவரின் கருவறையி லிருந்து வடக்கு நோக்கிய வாயில் ஒன்று அமைந் துள்ளது. வடக்குச் சுற்றிலுள்ள கிணற்றிற்குக் கீழ் புறமாக வடக்கு நோக்கிய வீரமாகாளியின் சந்நிதி அமைந்துள்ளது. இந்த வீரமாகாளியின் சந்நிதிக்கு நேர் வடக்கே வடபுறச் சுவரிற்கு வெளிப்புறத்தே வடக்கு வீதியின் வடக்குப் பக்கமாக மாணிக்க நாச்சி யார் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இந்த மாணிக்க நாச்சியார் திருவாரூரில் கணிகையர் குலத்தில் அவத ரித்து சிவ நெறியை வளர்த்த செல்வியாக இருக்க வேண்டும். இன்றும் திருவாரூரில் மாணிக்க நாச்சியா ருக்கு வடக்கு வீதியின் கீழ்க்கோடியில் ஒரு ஆலயம் அமைந்துள்ளது. ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவாலயத் தில் அல்லியங்கோதையார் சந்நிதியில் சுற்றுச் சுவர் சித்திர வரிசையில் மாணிக்க நாச்சியார் உடன்கட்டை ஏறிய வரலாறு எழுதப் பெற்றிருக்கிறது. மாணிக்க நாச்சியார் பதியிலார் குலத்தில் பிறந்த பான்மையால் அக்கால வழக்குப்படி சிவநெறியில் நிற்கும் ஒருவரிடம் அற்றைப் பரிசங்கொண்டு அவரையே அந்த நாளைக் குத் தன் கணவராகக் கொண்டு வாழ்ந்து வருவாரா யினர்,

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னிய சீர்ச்சங்கரன் தாள்மறவாமை பொருளென்றே"

என்ற சேக்கிழாரடிகளின் திருவாக்கிற் கிணங்க அம்மையார் பரத்தையர் வாழ்க்கையை மேற்கொண்டு

வாழ்ந்தாராயினும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சினை உடையராய்,

"எங் கொங்கை நின்அன்பர் அல்லார் தோள் சேரற்க"

என்ற மணிமொழியின்படி சிவநெறியில் நிற்பாரையே தன் கணவன்மாராகக்கொண்டு வாழ்ந்துவரும் கடப்பாடுடையவ ராயினர். தொண்டரை விளக்கங் காண்பது பெருமானின் அருட்டிரு விளையாட்டாதலின், ஒருநாள் பெருமான் தான் ஒரு சிவவேடப் பொலிவுடையராய் அம்மையார் இல்லத்தினை அடைய; அன்று அவரையே தன் கணவனாக வரித்து இல்லத்துட்கொண்டு சென்று வேண்டிய சிறப்புக்களை அம்மையார் செய்வாராயினர். வந்த அடியவர் அன்றிரவே அம்மையார் வீட்டில் ஆவி நீக்க; மறுநாள் காலையில் அம்மையார் அடியவர் உடலைச் சுடலையில் ஈம எரியிற் படுத்துத் தானும் உடன்கட்டை ஏறினர் என்பது செவிவழி வரலாறு.

வடக்குச் சுற்றில் கீழ்புறமாகத் தெற்கு நோக்கிய சந்நிதியுடன் ஸ்ரீ தண்டபாணி சுவாமியின் சந்நிதியிருக்கின்றது. சந்நிதியினிருமருங்கிலும் வாகனங்கள் அமைந்துள்ளன. கீழ்புறம் பூமேடை அமைந்துள்ளது. கிழக்குச்சுற்றின் வடக்குக் கோடியில் உள்ள யாகசாலை இப்போது உக்கிராண அறையாகப் பயன்பட்டு வருகின்றது. அதனை அடுத்து மேற்கு நோக்கி பைரவர், சூரியன், சந்நிதிகள் உள்ளன.

அம்மன் சந்நிதியில் உள்ள பெரிய மண்டபத்தின் தென் கோடியில் சோமாஸ்கந்தர் சந்நிதி அமைந்துள்ளது. அடுத்து கிழக்கு நோக்கிய மகாகணபதி, தண்டபாணி, சந்நிதிகள் அமைந்துள்ளன. இவ்வாலயத்தே முருகப் பெருமானுக்கு உரிய திருஉருவங்கள் அதிகம் அமைந்திருப்பதை நோக்கும்போது பண்டைநாளில் இவ்வூர் மக்கள் முருகப் பெருமானிடத்தே

தனித்த பக்தி உடையராய் வாழ்ந்தார்கள் என்பது புலனாகின்றது.

இம் மண்டபத்தின் வடதுபுறத்தில் தான் இத்தல அம்பிகையாகிய ஸ்ரீ காவியங்கண்ணி அம்பாளின் சந்நிதியிருக்கின்றது. அடுத்திருப்பது மகா மண்டபம், இம் மண்டபத்தில் ஸ்ரீ சிவகாமி அம்மையுடன் ஸ்ரீ நடராஜப் பெருமான் உற்சவராகக் காட்சியளிக்கின்றார். ஸ்ரீ நடராஜருக்கு இடதுபுறமாக சமயகுரவர் நால்வருக்கும் உற்சவ மூர்த்தங்கள் அமைந்துள்ளன. அடுத்து வீரமாகாளி, மாரியம்மன், அகஸ்தியர் திருவுருவங்கள் உற்சவராகக் காட்சி அளிக்கின்றன. ஸ்ரீ நடராஜமூர்த்தியின் வலதுபுறம் உள்ள உற்சவ மூர்த்தங்கள் பின் வருமாறு:

1. ஸ்ரீ சண்டிகேஸ்வரர்.
2. ஸ்ரீ சந்திரசேகரர், (தனி அம்மையுடன்)
3. ஸ்ரீ பிரதோஷநாதர்.
4. ஸ்ரீ சுக்கிரவார அம்மன்.
5. ஸ்ரீ வள்ளி தெய்வயானையுடன் கூடிய சுப்பிரமணியர்.
6. ஸ்ரீ விநாயகர்.

இந்த மகா மண்டபத்தை அடுத்து மண்டபம் ஒன்றமைந்துள்ளது. இதில் மேடை ஒன்று உண்டு. இதனை அடுத்து அர்த்த மண்டபம் அமைந்துள்ளது. இதனை அடுத்து, கோயிலின் ஸ்தல மூர்த்தியாகிய **திருப்பயற்றுநாதர்** பெரிய மூர்த்தியாக முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாகக் காட்சியளிக்கின்றார்.

### சிற்பச் சிறப்பு, ஆபரணங்கள், வாகனங்கள்.

இவ்வாலயத்தில் குறிப்பிடத்தக்க சிற்ப வேலைப்பாடுகளில்லை. கருவறையினுடைய பின்புறத்தில்

செதுக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகளிலிருந்து சில உண்மைகள் அறியக்கிடக்கின்றன. முன் கல்வெட்டு "ஸ்வஸ்தி ஸ்ரீ திருபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு 25 வதின் எதிராம் ஆண்டு" என்று தொடங்குகின்றது. இந்த இராஜ இராஜன், இரண்டாம் இராஜ ராஜன் அல்லது மூன்றும் இராஜ ராஜன் ஆக இருக்க வேண்டு மென்று சாஸன ஆராய்ச்சிக்காரர்கள் கருதுகின்றனர். அக்காலத்தே இவ்வூரில் வாழ்ந்த பஞ்சநத வாணனின் உறவினர் அவன் கண்ணேய் நீங்குவதற்கென இறைவனுக்கு நிலம் அளித்த செய்தியை இக்கல்வெட்டுக் கூறு கின்றது.

சுவாமிக்குச் செம்பினால் நாக கவசம் ஒன்றிருக் கிறது. அம்பிகைக்கு வெள்ளி அங்கி ஒன்றிருக்கின் றது. வேறு பொன்னலும் மணியாலும் ஆகிய ஆபர ணங்களில்லை.

112945

ஆலயம் சிறியதாயிருந்தாலும் அழகிய வாகனங் கள் பல அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க செய்தி யாகும். வடக்குச் சுற்றின் கீழக்கோடியில் உள்ள ஸ்ரீ தண்டாயுதபாணி மண்டபத்தினிரு மருங்கிலும் கீழ்க்காணும் சிறந்த வாகனங்கள் அமைந்துள்ளன.

1. அழகிய மயில்வாகனம், 2. பெரிய இடபவா கனம், 3. சுற்றுக் குதிரை வாகனம், 4. ஆட்டுக்கடா வாகனம், 5. விநாயகருக்கு மூஷிக வாகனம், 6. சூரன், 7. அம்பிகைக்கு அன்னவாகனம், 8. பிரதோஷ நாய னருக்குச் சிறிய இடப வாகனம், 9. பல்லக்கு அடிப் பீடம்.

கிழக்கு வீதியில் சிறந்ததொரு இரதமிருக்கிறது. (தேர் அல்ல) வைகாசி விசாக உற்சவம் ஒருநாள் விழா வாகப் பல ஆண்டுகளுக்கு முன் கொண்டாடப்பெற்ற

O23:38. 2\193.T

பொழுது இந்த இரதம் பயன்படுத்தப்பெற்று வந்தது. இப்பொழுது பழுதுருமல் காக்கப்பெற்று வருகின்றது.

**தலத்தைப்பற்றிய வரலாறு.**

இத்தலத்தே பயிரவ மகரிஷி; பெருமானை பூஜித்திருக்கிருர். திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பெற்றிருப்பதால் கி. பி. 7-ம் நூற்றுண்டிற்கு முன்னரே இத்தலம் சிறப்புற்றிருக்க வேண்டும். பெருமானுக்குத் திருப்பயற்றுநாதர் என்ற பெயர் வழங்கி வருவதை நாவுக்கரசு சுவாமிகளே தமது பதிகத்தின் பாடல் ஒவ்வொன்றிலும் திருப்பயற்றூரனுரே, என்று கூறிச் செல்வதால் அறியலாம். பெருமானுக்குப் பயற்றுநாதர் என்ற பெயர் அமைந்ததற்குக் காரணம் கீழ்க்காணும் செவி வழிக் கதையால் உணரப்படுகின்றது.

முன்னெரு காலத்தில் சிவபெருமானிடத்தே பேரன்பு பூண்ட வணிகர் ஒருவர் மிளகு வாணிபம் செய்து வந்தார். தமிழ் நாட்டில் பழங்காலத்தில் மிளகு வாணிபம் சிறந்திருந்தது என்பது வரலாற்று உண்மை ஆகும். இன்று மலையாள நாடு என வழங்கப்பெறும் பண்டைய சேரநாட்டில் மிளகு அன்றும் விளைந்தது. யவனர் மிளகுப் பொதியினைப் பெற்றுக் கொண்டு பொன்னையும் மணியையும் கொடுத்துச் சென்றனர். சுமார் 1800 ஆண்டுகட்கு முன் தமிழகத்தின் கிழக்குப்பகுதியில் காவிரிப்பூம்பட்டினம், சிறந்த துறைமுக நகரமாய் விளங்கிய உண்மை, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் போன்ற சங்க நூல்களால் உணரப்படுகின்றது.

"நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்,
காலின் வந்த கருங்கறி மூடையும்"

என்னும் பட்டினப் பாலை அடிகளால்; காவிரிப்பூம் பட்டினத்திற்குத் தரை மார்க்கமாகச் சேர நாட்டிலிருந்து மிளகு மூட்டைகள் கொண்டுவரப் பெற்று

மரக்கலங்களின் மூலம் அயல்நாடுகளுக்கு அனுப்பப் பெற்றன என்பதும், அராபி நாட்டிலிருந்து மரக்கலங் களின் மூலம் வந்த குதிரைகள் காவிரிப்பூம்பட்டி னத்தே இறக்கப்பெற்றன என்பதும் அறியப்படு கின்றன. மேற்கண்ட வணிகர் தமது மிளகுப் பொதி களுடன் கடற்றுறை நோக்கி இத் தலத்தின் வழியே சென்றனர். வணிகர் அண்மையில் சுங்கச்சாவடி இருக்கக் கண்டு, இத் தலத்தின் பெருமானை அடைந்து "ஐயனே, அடியேன்பால் மிகுந்த மிளகுப்பொதிகள் இருக்கின்றன. இவற்றுடன் நான் சுங்கச் சாவடியை அடைந்தால், சுங்க அதிகாரிகள் மிளகுப் பொதிக்கு அதிகச் சுங்கம் விதிப்பார்கள், அதனுல் எனது வாணி பத்தில் பெருத்த நஷ்டம் ஏற்படும். வேண்டுவார் வேண்டுவதையே ஈயும் பரம கருணாநிதியாகிய தாங்கள் அடியேனது குறையையும் தவிர்த்தருளல் வேண்டும். சுங்கச் சாவடியில் பயறு மூட்டைகளுக்குச் சுங்கம் விதிப்பதில்லை. ஆதலின் அடியேன் சுங்கச் சாவடியினைக் கடக்கும்வரை இம் மிளகு மூட்டைகள் எல்லாம் பயறு மூட்டைகளாய் மாறியிருக்கும் வண்ணம் திருவருள் புரிதல் வேண்டும்," என்று வேண்டி அன்றிரவு இத் தலத்தே தங்கி அயர்வு மிகுதியால் உறங்கினர். பெருமான் வணிகரது கனவில் தோன்றி "உமது மிளகுப்பொதிகள் யாவும் பயற்றுப்பொதிகள் ஆயின. இன்றுதொட்டு இப்பதிக்குப் பயற்றூர் என்னும் பெயர் வழங்குவதாக. நமக்கும் பயற்றுநாதர் என்னும் பெயர் வழங்குக" என்று கூறி மறைந்தருளினர். இவ் வுண்மையினை இராமலிங்க அடிகள் தமது திருவருட்பாவில்,

"மயற்றூர் பறித்த மனத்துள் விளைந்த
பயற்றூர் திசை யெம்பரனே"

என்று பாடிச் சென்றிருக்கிறார்கள்.

வணிகர் திகைத் தெழுந்து பெருமானின் கருணைத் திறத்தினை வியந்து தமது மிளகுப்பொதிகளை அவிழ்த்

துப் பார்க்க அனைத்தும் பயற்றுப் பொதிகளாக இருப்பதைக் கண்டு அச்சமும், ஆனந்தமும் அடைந்தார். பின்னர் பெருமானை விட்டகல்வதற்கு மனமில்லாதவராய்ச் சில நாள் வதிந்து ஒருவாறு தேறித் தன் வாணிபம் கருதிக் கிழக்கு நோக்கிச் சென்றார். சுங்கச் சாவடியில் தடை ஒன்றும் இல்லாதுபோகவே வணிகர் அப்பாற் சென்று; தன் பொதிகளை அவிழ்த்துப் பார்க்க, தன் வேண்டுகோளின்படி அனைத்தும் மிளகாகவே இருத்தலைக் கண்டார். பொதிகளைப் புகார்த் துறைமுகத்தே பெருவிலைக்கு விற்றுப் பெரும் பொருள் பெற்றார். வணிகருக்கு வாழ்வில் உவர்ப்பு ஏற்படத் திருவருள் வசப்பட்டவராயினர்.

"காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடை வழிக்கே."

என்ற உண்மை உரையால் பட்டினத்தடிகள் முற்றத் துறந்தது போன்று இவ் வணிகரும் துறவுள்ளம் பூண்டுத் தம் செல்வ மனைத்தையும் சிவபெருமானுக்கே உரிமையாக்கி வாழ்ந்து முடிவில் சிவானந்தப் பெருவாழ் வெய்தினர்.

## இத் தலத்தில் வழிபடுவதால் பெறும் பயன்.

மேற்கண்ட செவி வழிக் கதையால் இத் தலத்தில் உள்ள இறைவனை உள்ளும் புறம்பும் ஒத்து வழிபடின் பெருமான் யாது வேண்டினும் தருவர் என்ற உண்மை புலப்படுவதால், ஒருவர் தாம் நினைத்த காரியம் சித்தியடைதல் பொருட்டு இத்தலத்தில் வழிபாடு புரியலாம் என்று தெரிகின்றது. பஞ்சநதவாணன் என்பவனின் கண்ணோய் நீங்குவதற்காக நிலம் கொடுத்த செய்தி இத் தலத்தின் முதல் கல்வெட்டினால் அறியப்படுவதால் யாரேனும் கண்ணோய் அடைந்திருப்பின் இத்தலத்தினை அடைந்து; கருணைதீர்த்தத்தில் மூழ்கி, நேத்ராம்பிகை என வழங்கப்பெறும் காவியங்கண்ணியையும், திருப்பயற்றுநாதனையும் வழிபடின் கண்ணோய் நீங்கப்பெறுவர் என்ற உண்மையும் புலனாகின்றது.

## நாட் பூசனையும் பிற விழாக்களும்.

நாள்தோறும் இத்தலத்தே காலையில் காலசந்தியும், நண்பகலில் உச்சிக்காலமும், மாலையில் சாயரக்ஷையும், இரவில் அர்த்தயாமமும் ஆகிய நான்கு கால பூசைகள் நிகழ்ந்து வருகின்றன.

இத் தலத்திலும் இதனை அடுத்துள்ள ஊர்களிலும் வசித்துவரும் பெருமக்கள் சிவபுண்ணியச் சீலர்களாய்ச் சிவனடி மறவாச் சிந்தையராய் வாழ்கின்றார்கள் என்பதற்கு அறிகுறியாக இத்தலத்தே ஆண்டுதோறும் நிகழும் மாத விழாக்களில் பேருக்கம் காட்டி நடத்தி வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

*1.* **வைகாசி விசாக உற்சவம்:—** இவ்விழா ஆலயத் திட்டத்தில் ஒரு நாள் விழாவாகச் சிறந்த முறையில் கொண்டாடப் பெற்றது. இரதத்தில் சோமாஸ்கந்தர் புறப்பாடு நடைபெற்றது. ஆனால் பொருளாதார நெருக்கடியால் இப்போது நிறுத்தப்பெற்றிருக்கிறது.

*2.* **ஆடி வெள்ளி:—** நான்கு வெள்ளிக்கிழமைகளிலும் அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகளும் நான்கு பிரகாரங்களிலும் உலாவருதலும் நடைபெறுகின்றன.

### உபயக்காரர்கள்:

முதல் வெள்ளி:— பில்லாலிப் பண்ணை, திருவாளர்:
**P. கோவிந்தசாமிப் பிள்ளை** அவர்கள்

இரண்டாவது வெள்ளி:— **கோயில் திட்டம்.**

மூன்றாவது வெள்ளி:— திருக்கண்ணபுரம் திருவாளர்:
**T. C. இராமரத்ன முதலியார்** அவர்கள்

நான்காவது வெள்ளி:—திருப்பயத்தங்குடி திருவாளர்:
**T. D. முத்துக்குமரசாமி பிள்ளை** அவர்கள் V. H. M.

3. **புரட்டாசி மாதம்:—** நவராத்திரி காலத்தில் அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் முதலிய சிறப்புகள் நடைபெறுகின்றன.

**உபயக்காரர்கள் :**

முதல் நாள்:— திருப்பயத்தங்குடி, திருவாளர் :
**A. S. கங்காதரம் பிள்ளை** அவர்கள்,
ஆலய தர்மகர்த்தர்.

இரண்டாம் நாள் :— திருப்பயத்தங்குடி, திருவாளர் :
**T. S. வேதநாயகம் பிள்ளை** அவர்கள்,
ஆலய நிர்வாக தர்மகர்த்தர்.

மூன்றும் நாள் :— திருப்பயத்தங்குடி, திருவாளர்கள் :
**T. V. மீனாட்சிசுந்தரம் பிள்ளை** அவர்கள்.
**A. கந்தசாமிச் செட்டியார்** அவர்கள்.

நான்காம் நாள் :— திருப்பயத்தங்குடி, திருவாளர் :
**S. சீநிவாஸ ஐயங்கார்** அவர்கள்.

**சரஸ்வதி பூஜை அன்று :—**
திருப்பயத்தங்குடி, திருவாளர் :
**T. D. முத்துக்குமாரசாமிப் பிள்ளை** அவர்கள், V. H. M.
மற்ற நாட்களில் கோயில் திட்டத்தில் விழாக்கள் நடைபெறுகின்றன.

4. **ஐப்பசி மாதம்:—** அன்னாபிஷேகம்.
திருப்பயத்தங்குடி திருவாளர்:
**T. S. வேதநாயகம் பிள்ளை** அவர்கள்,
ஆலய நிர்வாக தர்மகர்த்தர்.

5. **கார்த்திகை மாதம்:—** திருக் கார்த்திகைத் திருவிழா. அபிஷேக ஆராதனைகளும், சந்திரசேகரர் வீதி உலாவும் நடைபெறும். கோயில் திட்டம். கார்த்

திகை மாத சோம வாரங்களில் கீழ்க்கண்ட உபயக் காரர்களால் அபிஷேக ஆராதனைகள் நடைபெறு கின்றன.

முதல் சோமவாரம்:—

திருவாளர் **K. நாகரத்தினம் பிள்ளை அவர்கள்,**
வீரப்பெருமாள்நல்லூர்.

இரண்டாவது சோமவாரம்:—

• தியாகராஜன்பேட்டை **ஐயாறு முதலியார் குடும்பத்தார்.**

மூன்ருவது சோமவாரம்:— கோயில் திட்டம்.

நான்காவது சோமவாரம்:—

வைப்பூர் திருவாளர் **வை. நாகப் பிள்ளை** அவர்கள்

6. **மார்கழி மாதம்** :— திருவாதிரை உற்சவம்; ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகள் நடை பெறும், வீதி உலா உண்டு.

உபயக்காரர்: திருப்பயத்தங்குடி திருவாளர்
**A. S. கங்காதரம் பிள்ளை** அவர்கள்.

7. **தை மாதம்** :— அம்பாளுக்கு வெள்ளிக்கிழமை உற்சவம்.

**உபயக்காரர்கள் :**

முதல் வெள்ளி :— கோயில் திட்டம்.

இரண்டாவது வெள்ளி:— பூசலாங்குடி
திருவாளர் **N. கண்ணுசாமிப் பிள்ளை** அவர்கள்.

மூன்ருவது வெள்ளி:— திருப்பயத்தங்குடி
திருவாளர் **சுப்பையா பிள்ளை** அவர்கள்.

நான்காவது வெள்ளி :— திருப்பயத்தங்குடி திருவாளர்
**T. D. முத்துக்குமரசாமி பிள்ளை** அவர்கள் V. H. M.

8. **மாசி மாதம்:—** சிவராத்திரிநாளில் கீழ்க்கண்ட உபயக்காரர்களால் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

**உபயக்காரர்கள் :**

முதற்காலம்:— திருவாளர் **A. S. கங்காதரம் பிள்ளை** அவர்கள்

இரண்டாவது காலம்:— **அரு. அரு. எஸ்டேட்.**

மூன்ருவது காலம்
நான்காவது காலம் } கோயில் திட்டம்.

**வரவு செலவு.**

கோயிலுக்குச் சொந்தமான நன்செய் புன்செய் நிலங்களும், தோப்புகளும், மனைக்கட்டுகளும் இருக்கின்றன. இவற்றின் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு கோயில் நிர்வாகம் நடைபெற்றுவருகின்றது.

**சொத்து விபரமும் ஆண்டு வருமானமும்.**

| விபரம். | ஏக்கர் | சென்ட். | வருஷ வருமானம் |
|---|---|---|---|
| 1. நன்செய் ... | 133 | 49 | ரூ. 8100—0—0 |
| 2. புன்செய் ... | 3 | 78 | ரூ. 75—0—0 |
| 3. மனைகள் - ஓட்டுக்கட்டடம் 2, கூரை வீடு 1, இரதக் கொட்டகை | | | ரூ. 25—0—0 |
| 4. தோப்பு புன்செய்யுள் அடங்கியவை தென்னை, இலுப்பை, புளி | | | தனி வருமானம் இல்லை. |
| 5. பாசிக் குத்தகை ... | | | ரூ. 50—0—0 |
| ஆக மொத்தம் ... | | | ரூ. 8250—0—0 |

## ஆண்டுச் செலவு விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிப்பந்திச் சம்பளம் | ரூ. | 2268—0—0 |
| 2. | கோயில் பூசை | ,, | 800—0—0 |
| 3. | நிலவரி, பஞ்சாயத்து வரி | ,, | 1715—0—0 |
| 4. | வருஷ ஏறுபடி | ,, | 600—0—0 |
| 5. | அறநிலையப் பாதுகாப்புக் கழகத்திற்கு ஆண்டுக் கட்டணம் | ,, | 350—0—0 |
| 6. | புன்செய் மராமத்து | ,, | 300—0—0 |
| 7. | இதரச் செலவுகள் | ,, | 217—0—0 |
| | ஆக மொத்தம் ... | ரூ. | 6250—0—0 |
| | ஆண்டு மீதம் | ரூ. | 2000—0—0 |

## கட்டளை நிலங்கள்.

| | |
|---|---|
| திருப்பயத்தங்குடி | சபாபதி பிள்ளை, ராமநாதம் பிள்ளை, வெங்கிடுசாமி பிள்ளை, இவர்களால் கோயிலுக்காக விடப்பட்டது. ஷெ நிலங்களின் வரும்படியைக் கொண்டு நித்திய படி, உச்சிகாலம், அர்த்தஜாமம் பிரதோஷம் நடத்தவேண்டியது. |
| அப்பாகுளம் கிராமம் | 1895-ம்ஹூ ஜனவரிமீ 11உ திருப்பயத்தங்குடி நமசிவாய பிள்ளை அவர்களால் எழுதிவைக்கப்பட்டது. |
| வீரப்பெருமாநல்லூர் கிராமம் | 1883-ம்ஹூ அக்டோபர்மீ 17உ திருப்பயத்தங்குடி சொக்கலிங்கம் பிள்ளை அவர்களால் எழுதிவைக்கப்பட்டது. |

| | |
|---|---|
| வைப்பூர் கிராமம் | வேலங்குடி சொக்கலிங்கம் பிள்ளை அவர்களால் எழுதிவைக்கப்பட்டது. தேசாந்திரி கட்டளை நடத்துவதற்காக எழுதி வைக்கப்பட்டது. |

### நிர்வாகம்.

மேற்கண்ட கட்டளை நிலங்களை வழங்கிய சபாபதிப்பிள்ளை வகையரா குடும்பத்தார் இக்கோயிலை பரம்பரை டிரஸ்டிகளாக இருந்து நிர்வகித்து வந்தார்கள்.

இப்பொழுது இந்த ஆலயம் சென்னை மாநில இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தின் மேற்பார்வையில் இருந்துவருகிறது. கழகத்தின் ஸ்கீம் திட்டப்படி 28—3—1930 முதல் நிர்வாகம் நடைபெற்று வருகின்றது. கோயில் நிர்வாகத்தைக் கழகத்தாரால் நியமிக்கப்பெற்ற டிரஸ்டிகள் நடத்தி வருகிறார்கள். நிர்வாகங்களைக் கவனிப்பதற்கும் கணக்கு எழுதுவதற்கும் எழுத்தாளர் ஒருவர் இருந்து வருகிறார். உள்துறை மணியம், மெய்காவல், தோட்டக்காவல் ஆகிய சிப்பந்திகளும் இருக்கிறார்கள்,

### டிரஸ்டிகள் :

1 திரு. **T. S. வேதநாயகம் பிள்ளை** அவர்கள்,
**மானேஜிங் டிரஸ்டி.**

2 திரு. **A. S. கங்காதரம் பிள்ளை** அவர்கள்,
**டிரஸ்டி.**

3 திரு. **K. நாகரத்தினம் பிள்ளை** அவர்கள்,
**டிரஸ்டி.**

## கல்வெட்டு.

தென்னாட்டு வரலாற்றினை அறிவதற்குப் பெருந் துணை புரியும் சாதனங்களில் கல்வெட்டும் ஒன்று. சோழரது ஆட்சிக்காலத்தே அவர்கள் கருங்கற் பணிக ளாகச் செய்த கோயில்களின் கருவறையிலும் சுற்றுச் சுவர்களிலும் கல்வெட்டுகளைப் பொறித்து வைத்துள் ளனர். பொது மக்களும் நிலங்களை ஆலயங்களுக்கு உரிமையாக்கும்போதும் அவ்வக்கால அரசர்களின் சிறப்புகளைக் கல்வெட்டுகளின் முற்பகுதியில் மெய்க் கீர்த்தியாகப் பொறித்துத் தாம் செய்த செயலையும் பின்னர்ப் பொறித்து வைத்தனர். இக் கல்வெட்டுகள் அக்கால வேந்தரின் வெற்றி, நாட்டெல்லை போன்ற வற்றை உணர்த்தும் வரலாற்றுக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. இவ் வாலயத்தின் கருவறையினைச் சூழச் சில கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. இவற்றை இன்னும் அரசியலார் கல்வெட்டு ஆராய்ச்சிக் குழுவினர் படி செய்யவில்லை.

திருவாளர் வித்வான் V. சுந்தரேச வாண்டையார் அவர்கள் 8—9—51-ல் இக் கல்வெட்டுகளில் முதல் கல்வெட்டினைப் படி செய்திருக்கிறார்கள், அது பின் வருமாறுள்ளது:

### கல்வெட்டு — 1.

கல்வெட்டு இருக்குமிடம்:— கருவறையின் மேல் புறச் சுவர் அடிப்பகுதி.

**வரி 1:**— ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவற்கு யாண்டு 25 ஆவதின் எதிரா மாண்டு கன்னி நாயற்றுப் பூர்வபக்ஷத்துப் பஞ்சமியும் புதன்கிழமையும் பெற்ற உரோகிணி நாள் திருப்பயற் றூரில் திருநாமத்துக் காணியாக விற்றுக்கொண்ட பயற்றூருடையான் பஞ்சநதவாணர், ஆனகண்பெற

இன மக்களால் பொன் ஆழவீசி தனம்பெற்று உடைய ——கொண்டபுத்த —— திருச்சிற்றம்பல முடையா னெழுத்து கண்ணுக விலைகொ

**வரி 2:**— ண்ட கிடங்கு நிலம் அரைமாவுக்கும் அறுநூறு காசு விலையாக யாமுரனிழு மாழிதித்...பியச் சிலவும் எழுதினது. இப்படி இவை புத்தமங்கல முடையான் திருச்சிற்றம்பல முடையான் எழுத்து என்றும் இப்படிக்கு ... ... வாருடையான் ... ... வீதி விடங்கப் பெருமான் எழுத்தென்றும் ஷ இப்படி அறிவேன் பயற்றாருடையான் தில்லைநாயகன் பெரு... எழுத்தென்றும் ஷ ... ... ... ... யான் பச்சதேவன் எழுத்தென்றும் ஷ இப்படி

**வரி 3:**— அறிவேன் புலியூர்க் கிழவன் உன்னுகிட் டார் எழுத்து என்றும் ஷ. பிரமாணம் எழுதின மைக்கு இவ்வூர் மத்யஸ்தன் பூசங்குடையார் திருவயா யாறுடையான் சங்க ... ... ... எழுத்து, அறுநூறும் கிட்டதுவ.

☆

### முதல் கல்வெட்டில் கூறப்பெற்ற செய்திகள்:

இத் திருப்பயற்றாரில் பஞ்சநதவாணன் என்பவ னுக்கு நோயால் வருந்திய கண் நன்ருகும்படி, அவன் சாதியார் அறுநூறு காசுக்குத் திருச்சிற்றம்பல முடை யானுக்குச் சொந்தமாயுள்ள கிடங்கு நிலம் அரைமா வாங்கிச் சிவபெருமானுக்கு உரிய நிலமாக விட்டுள் ளனர்.

### குறிப்பு:

கல்வெட்டின் தொடக்கத்தில் ஸ்வஸ்தி என்றிருப் பது மங்களம் உண்டாகுக என்ற பொருளைத்தருகிறது. திரிபுவனச் சக்ரவர்த்தி என்பது சேர, சோழ, பாண் டிய நாடுகளுக்குத் தலைவன் என்ற பொருளைத்

தருகிறது. இதில் குறிக்கப்பெற்ற சோழ அரசன் இரண்டாம் இராஜ ராஜன் அல்லது மூன்றும் இராஜ ராஜனுக இருக்கவேண்டும். இரண்டாம் இராஜராஜன் என்பவன் தில்லை அம்பலத்திற்குப் பொன்வேய்ந்த இரண்டாங் குலோத்துங்கனுடைய மகன் ஆவன். இந்த இராஜ ராஜன் கி. பி. 1146-ல் சிங்காதன மேறினுன். மூவருலா என்ற நூலில் ஒட்டக்கூத்தர் இவனை இரண்டாவது உலாவின் பாட்டுடைத் தலைவனுக வைத்துப் பாடியுள்ளார். மூன்றும் இராஜராஜனயின் அவன் காலம் 12-ம் நூற்றுண்டின் கடைப் பகுதியாக இருக்கவேண்டும். எனவே, இக் கல்வெட்டுகள் சுமார் 750 ஆண்டுகட்கு முற்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

## இலக்கியம்:

இத்தல சம்பந்தமாகத் தனி இலக்கியம் ஒன்றும் காணப்பெறவில்லை. இராமலிங்க அடிகள் தமது அருட்பாவில் ஓரிடத்தில்,

"மயற்றூர் பறித்த மனத்துள் விளைந்த
பயற்றூர் திசையெம் பரனே"

என்று பாடிச் சென்றிருக்கின்றூர்கள். இத் தலத்திற்கு ஏற்றத்தைத் தருவது கீழ்க்காணும் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருப்பதிகம்தான்.

பண் – நேரிசைக் கொல்லி.

இராகம் – நவரோஸ். தாளம் – ஆதி.

திருச்சிற்றம்பலம்.

1. உரித்திட்டார் ஆனை யின்தோல் உதிரவாறு ஒழுகி ஓட
விரித்திட்டார் உமையாள் அஞ்சி விரல்விதிர்த்து அலக்கண் நோக்கித்
தரித்திட்டார் சிறிதுபோது தரிக்கிலர் ஆகித் தாமும்
சிரித்திட்டார் எயிறு தோன்றத் திருப்பயற்றூர னூரே.

கயமுகாசுரன் யானை வடிவுடன் இறைவனை எதிர்க்க இறைவன் அவ்வியானையை உரித்துத்

தோலை மேலே போர்த்திக் கொண்டான். இவ் வீரச் செயலைக் கண்டு அம்மை கை உதறி நடுநடுங்க அம்மையின் மென்மைத் தன்மை நோக்கிப், பற்கள் தோன்றும்படி இறைவன் சிரித்தான்.

2. உவந்திட்டங்கு உமையோர் பாகம் வைத்தவர் ஊழி ஊழி
பவந் திட்ட பரம ஞூர் தாம் மலைச்சிலை நாகம் ஏற்றிக்
கவர்ந் திட்ட புரங்கள் மூன்றும் கனல் எரியாகச் சீறிச்
சிவந்திட்ட கண்ணர் போலும் திருப்பயற் றூர ஞரே.

முன்னே இறைவியை நடுங்கச்செய்து நகைத்துத் தன் இடதுபாகத்தே அச்சம் நீங்க மகிழ்ச்சியோடு வைத்துக்கொண்டார். ஊழி ஊழி பவந்திட்ட பரமனுர் என்ற தொடர், பெருமான் தனது அலகிலா விளையாட்டாகப் பல ஊழிக்காலங்களைத் தோற்றுவிக்கின்ருன் என்ற உண்மையினைக் கூறுகின்றது. மேரு மலையாகிய வில்லில் வாசுகியாகிய பாம்பை நாணுக ஏற்றித் திரிபுரங்கள் எரிந்துபோகும் வண்ணம் சினத்தால் கண் சிவந்து நின்ருர்.

3. நங்களுக்கு அருளது என்று நான்மறை ஓது வார்கள்
தங்களுக்கு அருளும் எங்கள் தத்துவன் தழலன் தன்னை
எங்களுக்கு அருள்செய் என்ன நின்றவன் நாகம் அஞ்சும்
திங்களுக்கு அருளிச்செய்தார் திருப்பயற் றூர ஞரே.

நான்கு வேதங்களை ஓதுவது தங்களுக்கு அருளைத் தரும் என்று எண்ணி அவற்றை ஓதுகின்றவர்களுக்கு அருள்புரிகின்ற தத்துவங்களுக்கு மேலானவன். நெருப்பினை ஒத்த வடிவினை உடையவன். வேதங்களை ஓதுவாருக்கு அருள் செய்வதேயன்றி அடியேங்களாகிய எங்களுக்கு அருள் செய்வாயாக என்று வேண்டி நிற்க எங்களுக்கும் முன்னின்று காக்கின்றவன். தன் தலையின்மீது உள்ள பாம்பினைக் கண்டு அஞ்சுகின்ற பிறைச் சந்திரனும் அஞ்சாத வண்ணம் அதனுக்கும் தன் அருளைச் செய்தவன்.

4. பார்த்தனுக்கு அருளும்வைத்தார் பாம்பரை ஆடவைத்தார்
சாத்தனை மகனு வைத்தார் சாமுண்டி சாமவேதம்
கூத்தொடும் பாட வைத்தார் கோள்அரா மதியம் நல்ல
தீர்த்தமும் சடையில் வைத்தார் திருப்பயற் றூர னரே.

அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுத்து அருளினுர். பாம்பொன்றினை இடுப்பில் கட்டிக் கொண்டு அது ஆடும்படிச் செய்தவர். ஐயனுரைத் தன் மகனுகக் கொண்டார். காளியைத் தான் ஆடும் போது சாமவேதத்தைப் பாடும் வண்ணம் செய்தார். வலிமையைக் கொள்கின்ற பாம்போடு அதன் பகை யாகிய சந்திரனையும், கங்கை நதியையும் தனது சடை யில் வைத்துக் கொண்டார்.

5. மூவகை மூவர் போலும் முற்றும்மா நெற்றிக் கண்ணர்
நாவகை நாவர் போலும் நான்மறை ஞான மெல்லாம்
ஆவகை ஆவர் போலும் ஆதிரை நாளர் போலும்
தேவர்கள் தேவர் போலும் திருப்பயற் றூர னரே.

படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத் தொழிலைச் செய்கின்ற பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூவராய் இருப்பவர். தன்னிடமிருந்து எழும்பும் நெருப்பினுல் உலகை யெல்லாம் சங்கரிக்கின்ற பெரிய நெற்றிக் கண்ணை உடையவர். (நான்கு + வகை என்பது நாவகை என வந்தது.) நான்கு வகையான வேதத்தை ஓதுகின்ற நாவினை உடையவர். நான்கு வேதங்களின் பயனுகிய எல்லா ஞானங்களாகவும் ஆகின்றவர். திருவாதிரைத் திருநாளைத் தனக்கு உரியதாகப் பெற்றவர். தேவர்களுக் கெல்லாம் தலையாய தேவர்.

6. ஞாயிருய் நமனு மாகி வருணனுய்ச் சோம னுகித்
தீயரு நிருதி வாயுத் திப்பிய சாந்த னுகிப்
பேயருக் காட்டி லாடும் பிஞ்ஞுகன் எந்தை பெம்மான்
தீயருக் கையர் போலும் திருப்பயற் றூர னரே.

சூரியன், யமன், வருணன், சந்திரன், அக்னி, நிருதி, காற்று என்ற தெய்வங்களாகத் தான் இருப்ப தன்றிச் சிறந்த சாந்த வடிவினனாகவும் இருக்கின்றான். பேய்கள் நீங்காத சுடுகாட்டில் நின்றாடுகின்றவன். தலைக்கோலம் அணிந்தவன் எனது தந்தையாகிய பெருமான். நெருப்பு நீங்காத கையினை உடையான்.

7. ஆவியாய் அவியு மாகி அருக்கமாய்ப் பெருக்க மாகி
பாவியாய்ப் பாவந்தீர்க்கும் பரமனாய்ப் பிரம னாகிக்
காவியங் கண்ணளாகிக் கடல்வண்ண மாகி நின்ற
தேவியைப் பாகம் வைத்தார் திருப்பயற் றூர னாரே.

உயிருக்கு உயிராய் இருப்பவன். யாகங்களில் இடம்பெறும் அவிசாக இருப்பவன். சுருக்கமாகவும், பெருக்கமாகவும் இருப்பவன். பாவி=பாவிப்பவன்-உயிர்களை ஆட்கொள்ளுதலின் பொருட்டு மானிடச் சட்டை தாங்கி மனிதனாகத் தன்னை பாவிப்பவன். தன்னை வழிபடுகின்றவர்களின் பாவத்தைப் போக்கு பவன். பிரமனாக இருப்பவன். காவி மலர் போன்ற கண்ணை உடையவளும், கடல் நிறம் உடையவளுமாகிய தேவியை இடப்பாகத்தே கொண்டவன்.

8. தந்தையாய்த் தாயுமாகித் தரணியாய்த் தரணி உள்ளார்க்கு
எந்தையும் என்ன நின்ற ஏழுலகு உடனு மாகி
எந்தையெம் பிரானே என்றென்று உள்குவார் உள்ளத்
சிந்தையும் சிவமு மாவார் திருப்பயற் றூர னாரே. [தென்றும்

இந்த உலகும் தானே ஆகி, உலகில் உள்ள மக்களுக்குத் தாயும், தந்தையும் ஆனவன். யானும் (அப்பரடிகளும்) என் தந்தை என்று சொல்லும் வண்ணம் இருந்தவன். நிலைத்த ஏழுலகங்களையும் உடன் நின்று செலுத்துதலின் அவற்றினுடன் சம்பந்தப்பட்டவனாய் இருப்பவன்.

"அவையே யாய்; தானே யாய்; அவையே தானே ஆய்" = ஒன்ருய்; வேருய்; உடனுய்; என்ற சித்தாந்த உண்மை ஈண்டு சிந்தித்தற்கு உரியது. எமது தந்தையே! எமது தலைவனே என்று எண்ணுகின்றவர்களின் உள்ளத்தில் சித்தமாக இருப்பவன். சிவனுகவும் அங்கு தங்கி இருப்பவன்."

9. புலன்களைப் போக நீக்கிப் புத்தியை ஒருங்க வைத்து
இலங்களைப் போக நின்று இரண்டையும் நீக்கி ஒன்ருய்
மலங்களை மாற்ற வல்லார் மனத்தினுட் போக மாகிச்
சினங்களைக் களைவர் போலும் திருப்பயற் றூர னுரே.

ஐம்புலன்களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின் ஆசையை நீக்கி, மனத்தை ஒருவழி நிறுத்தி (இல்லங்கள் என்பது இலங்களென நின்றது) உயிர் குடிகொண்டிருக்கின்ற காரண சரீரம் முதலிய தங்குமிடங்களை விட்டு; யான் அவன் என்று இரண்டாகின்ற தன்மையைப் போக்கி இரண்டறக் கலந்து மும்மலங்களை நீக்கும் மெய்யடியார்களின் மனத்தில் சிவானந்தப் பெருவாழ்வை அளித்து அவர்களிடத்தில் உள்ள கோபம் முதலிய குற்றங்களைக் களைவர்.

இப் பாடல் சீவன்முத்தி நிலையை உணர்த்துகின்றது.

10. மூர்த்திதன் மலையின்மீது போகாதான் முனிந்து நோக்கிப்
பார்த்துத்தான் பூமி மேலாற் பாய்ந்துதான் மலையைப் பற்றி
ஆர்த்திட்டான் முடிகள் பத்தும் அடர்த்துநல் அரிவை அஞ்சத்
தேத்தெத்தா என்னக் கேட்டார் திருப்பயற் றூர னுரே.

பெருமானது கைலமலையின்மீது தேரைச் செலுத்தாத பாகனைக்கோபித்துப் பார்த்துப் பூமியில் குதித்து

அக் கைலை மலையைப் பெயர்த்து உமையும் அஞ்சும் வண்ணம் ஆரவாரம் செய்த இராவணனது பத்துத் தலைகளையும் நெரித்துப், பின்னர் அவன் தேத்தெத்தா என்னும் அனுகரண ஓசையுடன் சாமவேதத்தைப் பாடக் கேட்டு அவனுக்கு அருள் செய்தார்.

முன்னர் இவ் வாலயத்தின் திருப்பணி *1915*-ல் தொடங்கப்பெற்று *1929*-ல் (சுக்கில-௵ ஆனி-௴ 7௳) கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பின்னர் சமீபத்தில் திருப்பணி தொடங்கப்பெற்று நாளது ஏவிளம்பி-௵ ஆனி-௴ 24௳ (8—7—57) திங்கட்கிழமையன்று கும்பாபிஷேகம் நடைபெற இருக்கின்றது.

112945

கருணாநிதி (தன்னியக்க) அச்சகம், விஜயபுரம். போன்-22

2C
13-3.78
8B
4-38

